அ.வ.எண். 162/2015
நாள்.22/03/2021
பெயர்-சபாபதி த.பெ. ரங்கசாமிகவுண்டர்
வாதி தரப்பு 1ம் சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்
பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எதற்காக வழக்கு தாக்கல் செயதுள்ளேன் என்றால் கிணற்றிற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கிணற்றில் என்ன பரிகாரம் என்றால் பாதி கிணறு எனக்கு உரிமை உள்ளது என பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். பாதி கிணறு எனக்கு பாத்தியம் என்பதற்கு பட்டா உள்ளதா என்றால் தனிபட்டா இல்லை. யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் என் அப்பா பெயரில் இருந்து என் பெயரிலும் மற்றும் பழனியப்பகவுண்டர் பெயரிலும் கூட்டாக உள்ளது. அந்த பட்டாவை ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைத்துள்ளேன். கிணற்றை சுற்றி 4 புறமும் யார் நிலம் உள்ளது என்றால் பழனியப்ப கவுண்டர் பெயரில் உள்ளது. அவர் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி. அந்த கிணற்றை சுற்றி உள்ள நிலத்தை யார் அனுபவித்து வருகிறார் என்றால் பழனியப்பகவுண்டர் அனுபவித்து வருகிறார். அந்த கிணற்றிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் பழனியப்ப கவுண்டர் பெயரில் உள்ளது. அந்த கிணற்றிற்கு மின்இணைப்பு வழங்கக்கூடாது என்று இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.530/1986 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு என்ன ஆனது என்றாலும் 31.7.1990ல் முழுமையான விசாரணைக்கு பிறகு தள்ளுபடி ஆகி விட்டது என்றால் சரியல்ல. என் பக்கம் தீர்ப்பானதா என்றால் இல்லை. அந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது என்பதற்கு நகல் ஒப்படைக்கிறேனா என்றால் ஒபப்டைக்கிறேன். என் வழக்கு தள்ளுபடி ஆனவிவரம் தெரிந்து கொண்டும் நிலுவையில் உள்ளதாக தவறான தாகவலை நீதிமன்றத்தில் தெரிவிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதிக்கு மின் இணைப்பு வழங்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்தேன் என்றாலும் அதை நிராகரித்து 1ம் பிரதிவாதி பெயருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து கூட்டுகிணறு இல்லை என்றாலும் அந்த கிணற்றில் எந்தவித பாத்தியம் சுாவதீனம் இல்லை என்றாலும் சரியல்ல. அந்த கிணற்றில் தண்ணீர் எடுத்து எத்தனை வருடம் ஆகிறது என்றால் தற்போதும் எடுத்துக்கொண்டு வருகிறேன். தாவா கிணறில எப்போதும் தண்ணீர் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எந்தபுறம் தண்ணீர் எடுத்து சொல்கிறேன் என்றால் மேற்கு புறத்தில் எடுத்து செல்கிறேன். யார் நிலத்தின் வழியாக தண்ணீர் எடுத்து செல்கிறேன் என்றால் பிரதிவாதி நிலத்தின் வழியாக எடுத்து செல்கிறேன். அவர்கள் நிலத்தின் வழியாக தண்ணீர் எடுத்து செல்வதற்கு ஏதேனும் எழுதிகொடுத்தார்களா என்றால் இல்லை. கிணறு கிணறு சுற்றி இருக்கும் நிலம் 1ம் பிரதிவாதிக்கு கிரயம் மூலம் பாத்தியம் என்றால் சரியல்ல. 1970ல் இருந்து சொத்து முழுவதும் 1ம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா இருந்து வருகிறது என்றால் சரியல்ல. யூடிஆரில் பிரதிவாதிக்கு தான் பட்டா கொடுத்துள்ளார் என்றால் கொடுத்துள்ளர் நான் கேட்டதற்கு வழக்கில் தீர்ப்பு வாங்கி வர சொல்லிவிட்டார்கள். யூடிஆர்-ரில் பிரதிவாதிகளின் பாத்தியத்தையும் அனுபவத்தின் அடிப்படையில் தான் பட்டா கொடுத்துள்ளர் என்றாலும் நான் எக்காலத்திலும் சுவாதீனத்தில் உரிமையிலும் இல்லை என்றால் சரியல்ல. நான் எந்த காலத்திலும் பிரதிவாதிகள் நிலத்தில் தண்ணீர் எடுத்து செல்லவில்லை என்றாலும் பிரதிவாதிகள் அதற்கு அனுமதிக்கவில்லை என்றாலும் அடங்கலிலும் அவ்வாறு இல்லை என்றால் சரியல்ல. கிணறு அதற்கு சுற்றி உள்ள நிலத்தை விற்றுவிட்டு நான் பொய் பாத்தியம் கொண்டாடி வீன் பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. கிணற்றில் எனக்கு எந்த வித பங்கும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பாதி பங்கு இருந்திருந்தால் வண்டி வழீ வசதியோ வேறு எந்த பாதை வசதியோ நிருத்தியிருப்பார்கள் என்றால் சரியல்ல. கிணறு எப்போது வெட்டியது என்றால் என் அப்பா காலத்தில் வெட்டியது. எத்தனை மெட்டு ஆழம் என்றால் அவர் கிரயம் செய்யும் போது 6 மெட்டு இருக்கும். தற்போது 17, 20 மெட்டு இருக்குமா

என்றால் நான் பார்க்கவில்லை. சாட்சி தற்போது 10 மெட்டு ஆழம் இருக்குதம் என்கிறார். கிணறு ஒரு மெட்டு வெட்டுவதற்கு சுமார் 50 ஆயிரம் ஆகும் என்றால் இல்லை 15 ஆயிரம் ஆகும். கிணறு வெட்டுவதற்கு நான் பழனியப்பனிடம் பணம் கொடுத்தேன். எப்போது கொடுத்தேன் என்றால் 1980ல் கொடுத்தேன். நான் 15 ஆயிரம் கொடுத்தேன் பழனியப்பன் எவ்வளவு பணம் கொடுத்தார் என்று அவருக்கு தான் தெரியும். நான் பணம் கொடுத்து பழனியப்பன் கிணறு வெட்டினார் என்ற விவரத்தை என் தாவாவில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லிஉள்ளேன். நான் பணம் கொடுக்கவில்லை என்றாலும் பழனியப்பன் சுயமாக செலவு செய்து மொத்தம் 17 மெட்டு ஆழத்தில் கிணறு வெட்டினார் என்றால் சரியல்ல. கிணறு 70, 75 அடி ஆழம் இருக்குமா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 என் அப்பா எனக்கு எழுதிவைத்ததாக ஆவணம் ஒப்படைத்துள்ளேன் அதன் அசல் ஆவணம் எங்கு என்றால் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன். நகலை தான் ஒப்படைத்துள்ளேன் அசலை ஒப்படைக்கவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். 1ம் பிரதிவாதி பழனியப்பனுக்கு விற்ற சொத்தின் செக்குபந்தி என்ன என்றால் வடக்கில் சிப்காட் மேற்கில் என் நிலம், கிழக்கு பழனிவேல், தெற்கில் அரூர் டூ கம்பைநல்லூர் மெயின் ரோடு. இந்த சொத்தை தான் 1ம் பிரதிவாதி பழனியப்பகவுண்டர்ருக்கு விற்பனை செய்தது என்றால் சரிதான். எனக்கு கொடுத்த தானசொத்திற்கு கிழக்கில் யார் நிலம் பழனியப்பன் மேற்கில் பெயர் தெரியவில்லை ஆனால் பழனியப்பகவுண்டருடையது இல்லை, வடக்கே சிப்காட் தெற்கில் ரோடு உள்ளது. எனக்கு தானம் கொடுத்த சொத்துக்கு மேற்கில் பழனியப்பகவுண்டருடையது நிலம் இருந்தது என்றாலும் வா.சா.ஆ.1ல் பழனியப்ப கவுண்டருக்கு கிழக்கே எழுதப்பட்டுள்ளது என்றால் அவர் வேறு ஒருவரிடமிருந்து வாங்கியது. தவறான செக்குபந்தி கொடுத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்தையும் சேர்த்து மோசடியான பத்திரம் தயார் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் கண்ட செக்குபந்திக்கும் தாவா சொத்திற்கும் எந்தவித சம்மந்தமுமில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து என் பெயருக்கு எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதும் போது நான் உடன் போயிருந்தேனா என்றால் போனேன். யார் சாட்சி என்றால் நினைவில்லை. பத்திரம் எங்கு எழுதியது என்றால் அரூரில் எழுதியது. தானபத்திரத்தை 1980-ல் எழுதப்பட்டது அதை அனுசரித்து அப்போதிலிருந்து பட்டா வாங்கினேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 மோசடியான தயாரித்து என்பதால் தான் நான் பட்டா வாங்கவில்லை என்றாலும் அதை அனுசரித்து சுவாதீனம் அடையவில்லை என்றாலும் சரியல்ல. சொக்கலிங்கம், துரைசாமி, புஷ்பா, அமராவதி ஆகியோர் வா.சா.ஆ.1ல் சாட்சி கையப்பம் செய்தார்கள். நான் சொன்ன நபர்கள் யாருமே சாட்சியே இல்லை என்றாலும் வா.சா.ஆ.1-ல் அவ்வாறு சாட்சி கையப்பம் இல்லை என்றால் சரியல்ல. முச்சலிக்கா எழுதியதாக நான் சொல்லி உள்ளேன் அவ்வாறு முச்சலிக்கா எழுதப்பட்டதா என்றால் இல்லை. 1980ல் மின் இணைப்பு சம்மந்தமாக முச்சலிக்கா எழுதப்பட்டது. எங்கு எழுதியது என்றால் நினைவில்லை. யார் எழுதியது என்றால் நினைவில்லை. சாட்சிகள் யார் என்றாலும் நினைவில்லை. முச்சலிக்கா எழுதியதை பதிவு செய்தோமா என்றால் இல்லை. 2 பேர் சேர்ந்து கையப்பம் செய்தோமா என்றால் ஆமாம். நான் ஒப்படைத்துள்ள முச்சலிக்கா வா.சா.ஆ.2 ஆனது என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 அசல் வழக்கு எண்.530/1986 வழக்கில் தீர்ப்பாணை ஒப்படைத்துள்ளேன் அதில் என் வழக்கு தள்ளுபடி ஆனது என்றால் சரிதான்.

கு.வி வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.